# ஈழத்துப்பாடசாலைகளில் இசைக்கல்வியும் இசை ஆசிரியர்கள் பயிற்சியும்

கிருபாசக்தி கருணா
யாழ் பல்கலைக்கழகம்
இலங்கை

♦

இந்து நாகரிக வரலாற்றில் கலைகள் மிக முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. இவ்வாறான புராண இந்துப் பண்பாட்டு மரபிலே கலைகள் 64 ஆகக் கூறப்படுகின்றன. இவற்றுள்ளே இசை, நடனம், சிற்பம் ஓவியம், கட்டிடம் என்பன நுண்கலைகள் என்று கூறப்படுகின்றன. இக்கலைகளுக்குள் தலையாய இசை என்ற சொல்லுக்கு இசைவைப்பது என்பது பொருள்.

இச்சிறப்பு வாய்ந்த கலைகளைக் கற்பதன்மூலம் ரசனை உணர்வு ஏற்படுகின்றது. இவ்உணர்வினாலேயே மனிதன் மனிதனாக வாழ்கின்றான். இந்த ரசனை உணர்வை நல்ல முறையிலே பயன்படுத்தி வளர்த்தெடுப்பது மிக முக்கியமானதாகும். ஒருவனுடைய ரசனை நல்லவழியிலும், தீய வழியிலும் செல்வதற்குச் சாத்தியங்கள் உள்ளன. எனவே அவனிலே இருக்கக்கூடிய ரசனை உணர்வை நல்ல ஆத்மீகக் கலைகள் மூலமாகவும், நல்ல கலாச்சார விழுமியங்கள் மூலமாகவும் வெளிக்கொணர வேண்டியது அவசியமாகிறது. இந்த வகையிலே மாணவன் தனது பாடசாலைப் பருவம் முடியும்போது ரசனை உணர்வு மிக்கவனாக வெளியேறவேண்டும் என்ற கொள்கைக்கிணங்க இலங்கையிலே பாடசாலைகளில் அழகியற் கலையை ஒரு பாடமாக நெறிப்படுத்தியுள்ளனர்.

இலங்கையிலே ஆரம்ப காலத்தில் பியானோ, வயலின் முதலிய வாத்தியத் துறைகளில் இலண்டன் பரீட்சைகள் நடைபெற்றன. கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலுமுள்ள பாடசாலைகளில் உயர் வகுப்புகளில் படித்த மாணவர்களில் சிலர் இப்பரீட்சைக்குத் தோன்றினர். கிறிஸ்தவப் பாடசாலைகளில் நாவலர், சேர். பொன். இராமநாதன் முதலியவர்களது முயற்சியால் இசையின் முதற்கட்டமாகத் தேவாரங்கள் கற்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இலங்கை கலைச்சங்கம் கொழும்பில் இசையுடன் தொடர்புடைய கண்காட்சியை நடத்தியது.

இக்காலகட்டத்திலே இரவீந்திரநாத் தாகூரும் அவரது இசை நடன மாணவ குழுவினரும் 1934 ம் ஆண்டு இலங்கைக்கு வருகைதந்து "சாபவிமோசனம்" எனும் தமது நாட்டிய நாடகத்தைக் கொழும்பு நீகல் மண்டபத்தில் மட்டுமின்றி இலங்கையின் பல்வேறு மாகாணங் களிலும் மேடையேற்றினர். இதனைத் தொடர்ந்து உதயசங்கரும், மேனகையும் தமது குழுவினருடன் இந்தியாவிலிருந்து வந்தார்கள். இந்நிகழ்ச்சிகள் வெறும் அழகியல் நயமாக இலங்கை மக்களிடம் இடம்பெறாது அழகியற் கலைகளை வரன்முறையாகக் கற்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டியதுடன் இந் நாட்டிற்குரிய தனித்துவமான அழகியற்கலை வடிவங்களைச் செப்பனிடவேண்டிய கல்வித்தேவைகளையும் உருவாக்கின. இதன் காரணமாக எமது நாட்டு மாணவர்கள் இந்தியாவில் சாந்திநிகேதம், இலக்குமணபுரி, கலாசேத்திரம், சென்னை, அண்ணாமலை ஆகிய இடங்களிற்குச் சென்று சங்கீதம், நடனம் ஆகியவற்றைப் பயின்று, திரும்பி வந்த போது, அவர்கள் இலங்கைப் பாடசாலைகளில் இசை, நடன ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர்.

அழகியல் கல்வி வளர்ச்சிக்கெனத் தனித்த நிறுவன அமைப்புக் களை கல்வித் திணைக்களத்தின் அனுசரனையுடன் ஆரம்பிக்க வேண்டிய அவசியம் பிற்காலத்தில் உணரப்பட்டது. சிங்கள மக்களின் அழகியல் வளர்ச்சிக்காக லங்கா சாந்தர்வ சபா அமைக்கப் பட்டது. அது ஓர் உதவிக்கல்விப் பணிப்பாளரின் கீழ் இயங்கியது. அவ்வாறே தமிழ் மக்களின் இசை, நடனக் கலைகளை வளர்க்கும் முகமாக வடஇலங்கைச் சங்கீத சபை (N.C.O.M.S) அமைக்கப் பட்டது.

1923ம் ஆண்டு இலங்கையின் ஒலிபரப்புச் சேவை ஆரம்பிக்கப் பட்டமையும், 1941ம் ஆண்டு சேர். கந்தையா தலைமையில் ஒலிபரப்பு பற்றிய சிறப்புக்குழு நியமிக்கப்பட்டமையும் இசை வளர்ச்சிக்கு ஒலிபரப்புத்துறை ஆற்றிய பங்கைக் காட்டுகின்றன. இதன் மூலமாகப் படித்தோர் மட்டத்தில் இசைக்கு இருந்த சிரத்தை அதிகரித்ததுடன் மாணவர்களின் ரசனை உணர்வு மேலும் விஸ்தரிக் கப்பட்டது.

1948 ம் ஆண்டிலே அரச நுண்கலைக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், இதன்மூலமாகப் பெறக்கூடிய தகைமைகளுக்கு அடிப் படைக் கல்வி அவசியம் என்ற ரீதியிலே பாடசாலைகளிலே நுண்கலைகள் போதிக்கப்பட வேண்டும் என்ற ஓர் எதிர்பார்ப்பு

இருந்தது. இதற்கமைய கலாநிதி. C.W.W. கன்னங்கரா தலைமையில் கல்வி விதப்புரை வழங்கிய குழுவினர் இசை, ஓவியம் ஆகிய அழகியற் கலைகள் பாடசாலைக் கலைத்திட்டத்தின் உள்ளடக்கத்தில் இடம்பெற வேண்டியதன் சிறப்பியல்பினை வலியுறுத்தினர். இதற் கமைய 1952ல் இசைக்கல்விப் பாடத்திட்டம் அரசால் அறிமுகப் படுத்தப்பட்டது.

1960களில் சுமார் 175 இசை ஆசிரியர்கள் பாடசாலைகளில் நியமனம் பெற்றார்கள். இக்காலகட்டத்திலே யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழுவின் ஆதரவிலான ஆண்டு இறுதி நாட்டுப்பாடல், நடனப்போட்டி பெரும் ஊக்கமளிப்பதாக இருந்தது. மாவட்ட ரீதி யிலான போட்டியில் 500ற்கும் மேற்பட்ட பாடசாலைகள் பங்கு பெற்றன. கலவிப் பொதுத் தராதர சாதாரண, உயர்தரப் பரீட்சைக்குப் பாடசாலை மாணவர் சங்கீதத்தை ஒரு பாடமாக எடுத்திருந்தார்கள். இக்கால கட்டத்திலே ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலேயும் சங்கீதம் ஒரு கட்டாய பாடமாக்கப்பட்டது.

1972 ம் ஆண்டில் அனைத்து மாணவர்களுக்கும் இடைநிலை மட்டங்களில் யாதாயினும் ஓர் அழகியற் பாடத்தைக் கற்கக் கூடியவாறு சமநிலையான கலைத்திட்டம் அறிமுகம் செய்யப் பட்டது. அழகியற் கல்வி ஏனைய பாடங்களுடன் ஒன்றிணைந்து கல்விச் செயற்பாடுகளை முழுமை பெறச் செய்யும் என்பது திட்ட வட்டமாக உணரப்பட்டது. பண்பாட்டில் உயர்ந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜையும் இசை, நடனம், ஓவியம் முதலிய அழகியற் படைப்புகளை நயக்கும் ஆற்றலுடையோராய் இருத்தல்வேண்டும் என்ற கருத்து கல்வியாளர்களிடம் நிலைகொண்டது. இக்காலம் முதல் பாடசாலைகளில் முக்கியத்துவம் பெறத் தொடங்கும் அழகியற்கல்வி முறைமை காரணமாக இசை, நடன ஆசிரியர்கள் அதிகம் தேவைப்படத் தொடங்கவே இசைக் கல்வியானது இசை ஆசிரியப்பயிற்சியாக மாறும் ஓர் நிலை ஏற்பட்டது.

இக்கால கட்டத்திலிருந்து இசை, நடனம் போன்ற பாடங் களுக்குப் பாடத்திட்டங்கள் தயார் செய்யப்பட்டன. இப்பாடத்தில் சில அம்சங்கள் அவ்வப்போது மாற்றியும், சேர்த்தும் புதுமாற்றம் பெற்றன. தற்போதுள்ள கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் (G.C.E.O/L) கல்விப் பொதுத் தராதர உயர்தரம் (G.C.E.A/L) ஆகிய வகுப்புகளிலுள்ள பாடத்திட்டங்கள் காலக்கிரமங்களில் மாற்றம் பெற்று வளர்ச்சியடைந்துள்ளன.

இவ்வாறு பாடசாலைகளில் மாணவர்களுக்கு இசையைப் போதிக்கும் ஆசிரியர்கள் பல வழிகளில் தம்மைத் தயார் செய்து கொள்ளவேண்டிய முக்கியத்துவத்தினைப் பெறுகின்றனர். ஆசிரியர் என்பவர் ஒரு மாணவனுக்கு குருவாகவும், தெய்வமாகவும் இருந்து பாடங்களிலும், அவனுடைய பண்புகளிலும் அவனுடைய நடத்தையிலும், அவனுடைய உடல் நலத்திலும் பங்குகொண்டு அவனை இந்தச் சமூகத்திற்கு ஏற்புடைய நற்பிரஜையாக வெளியேற்றுகிறார். இவ்வாறான ஆசிரியர் உயர்தரமானதும், சமூகத்திற்கும் சமகாலத் தேவைகளுக்கும், ஏற்றதான சிறந்த பயிற்சியைப் பெறுவது அவசியமாகின்றது. மாணவர்களுடைய உள்ளங்களைப் புரிந்து அவர்களுடைய எதிர்பார்ப்புகளைச் சமப்படுத்தி இசைக் கலவையை வெற்றிகரமாக போதிக்கக்கூடிய ஆற்றலை ஆசிரியர் பயிற்சியில் மாத்திரம் பெறமுடிகின்றது.

இலங்கையில் இன்று பலதரப்பட்ட வகையான பயிற்சிகளை ஆசிரியர்கள் பெற்று வருகின்றார்கள். அவையாவன:

1. ஆசிரியர் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சி
2. தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி
3. முன் சேவைப் பயிற்சி (Pre-Service)
4. சேவைக்காலப் பயிற்சி
5. கல்வியியற் கல்லூரியப் பயிற்சி நெறி

*ஆசிரியர் கலாசாலையில ஆசிரியர் பயிற்சி*

இசை ஒரு நாட்டின் கலாசாரத்தை, பண்பாட்டைத் தட்டி எழுப்புகின்றது. தனிமனிதனைப் பொறுத்தவரையில், அவன் பலதரப்பட்ட நாளார்ந்த கடமைகளில் ஈடுபட்டுப் பல சிக்கல்களையும் பிரச்சினைகளையும் எதிர்நோக்கித் தன்னுடைய மூளை களைப்படைந்த நிலையில் அவனுக்கு இசையானது உளரீதியில் ஓர் ஆறு தலைக் கொடுத்துப் புத்துணர்ச்சியைக் கொடுக்கிறது. இந்த வகையிலே ஆசிரியர் கலாசாலைகளில் ஆரம்பப்பாடப் பிரிவினருக்கும் ஏனைய பிரிவினருக்கும், இசைப்பயிற்சி அளிக்கப்படுகின்றது.

இவ்விடத்தில பேராசிரியர் சாம்பமூர்த்தி அவர்களின் "The Teaching of Music" என்ற நூலிலுள்ள ஏழாவது அத்தியாயமாகிய "Music in Training School and Training College" என்பதிலுள்ள சில கருத்துக்கள் குறிப்பிடத்தக்கன.

இசையானது பயிற்சிப் பாடசாலைகளிலும் பயிற்சிக் கல்லூரி களிலும் கட்டாயமாகப் பயிற்றுவிக்கப்படவேண்டும். பாடத்திட்டத் திலுள்ள பாடங்களுக்கு மேலதிகமாக, திறமையுள்ள ஆண், பெண் ஆசிரியர் இருபாலாருக்கும் இசைப்பயிற்சி வழங்கப்பட வேண்டும். ஆரம்பப் பாடசாலைகளில் இசையாசிரியர்கள் இல்லாதவிடத்து ஏனைய பாட ஆசிரியர்களே சங்கீதம் கற்பிக்கவேண்டும்.

பயிற்சிக் கலாசாலைகளில் முதலாம் வருடத்தில் கேட்டல், இரசித்தல், திறனாய்வினை வளர்த்தல், திறனை வெளியிடுதல், இசையியல் தொடர்பான விரிவுரைகள் ஆகியவற்றுடன் 20 எளிய பாடல்கள் செயல்முறைப் பாடவேளைகளில் கற்பிக்கப்பட வேண்டும்.

இரண்டாம் வருடத்தில் இசையின் கற்பித்தல் முறைபற்றி சுமார் 60 விரிவுரைகள் எடுக்கப்பட வேண்டும். இசை அட்டவணைகள் தயாரித்தல், இசை கற்பிக்கப்படும்போது அவதானித்தல், விரிவு ரையாளர்கள் மாதிரி வகுப்புகளை நடத்துதல், இசை விரிவுரை யாளரின் மேற்பார்வையில் ஆசிரிய மாணவர்கள்கீழ் வகுப்புகளுக்கு திறனாய்வு வகுப்பெடுத்தல், மூன்றாம் தவணையின்போது ஒவ்வொரு பயிற்சி மாணவரும் பயிற்சிப் பாடங்கள் எடுத்தல் (Teaching Practice) ஆகிய செயற்பாடுகள் விரும்பத்தக்கது.

வருட ஆரம்பத்தில் ஒவ்வொரு ஆசிரிய மாணவரும் குறைந்தது பத்துத் தடவைகளாவது கற்பிக்கும் சந்தர்ப்பபத்தைப் பெறுவது சிறந்தது. ஒவ்வொரு ஆசிரிய மாணவனும் கற்பிக்கும்போது ஏனையோர்கள் அவதானித்துக் குறிப்புகளை எடுக்கவேண்டும். பாடம் பொருத்தமான அறிமுகத்துடன் ஆரம்பிக்கப்படுமா? கற்பித்தல் சாதனங்கள், கரும்பலகை போன்றன பொருத்தமாக உப யோகிக்கப்படுகின்றனவா? என்று இவற்றிலுள்ள சரிபிழைகள் குறிக்கப்படுவதுடன் வகுப்பு உற்சாகமாகவும் சுவாரசியமாகவும் இருந்ததா என்பதையும் அவதானிக்க வேண்டும்.

இவற்றுடன், இசைப்பாட மொன்றை நடத்தவிருக்கும் ஆசிரிய மாணவரொருவர் மனதில் கொள்ளவேண்டிய விடயங்களைப் பற்றியும், ஆசிரிய மாணவர் கற்பிக்கும்போது விரிவுரையாளர் அவரின் திறமையை அளவிடும் சமயம் எந்தெந்த விடயங்களை அடிப்படையாக வைக்கவேண்டும் என்பது பற்றியும் இந்நூலில் கூறப்பட்டுள்ளது.